இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 08.04.2026

# ஜானகி எம்.ஜி.ஆர். மறைவும் ஆர்.எம்.வீ. அளித்த வாக்குமூலமும்!

ஜானகி எம்.ஜி.ஆர். மறைந்தபோது, கடற்கரையில் அடக்கம் செய்யக் கேட்டதாகவும், தி.மு.க. அரசு அன்று அனுமதி தரவில்லை என்றும் வாய்க்கு வந்த பொய் மூட்டையை அவிழ்த்துள்ளார் பழனிசாமி. அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டால், ஏதுமில்லை. ஏதாவது பொய்யைச் சொல்லி பிழைப்பை நடத்திக் கொண்டு இருக்கிறார் பழனிசாமி.

**1996 ஆம் ஆண்டு முதலமைச்சராக பதவி ஏற்கிறார் தலைவர் கலைஞர். தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தவர்கள் படம் எல்லாம் வரிசையாக கோட்டையில் அமைச்சரவை அரங்கில் மாட்டப்பட்டு இருக்கும். ஆனால் அதில் ஜானகி எம்.ஜி.ஆர். அவர்களின் படம் இல்லை. ஜெயலலிதா வைக்கவில்லை. இதனை உணர்ந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், உடனடியாக ஜானகி எம்.ஜி.ஆர். படத்தை மாட்டச் சொன்னார்கள். எனவே, தி.மு.க.வுக்கு பெருந்தன்மையை பழனிசாமி போதிக்கத் தேவையில்லை.**

1996 மே 19 ஆம் நாளன்று ஜானகி எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்தார்கள். இராமாவரம் தோட்டத்தில் தனது பேத்தி பிறந்த நாளைக் கொண்டாடி விட்டு மதிய உணவு சாப்பிட்டார் ஜானகி. பகல் 2.30 மணிக்கு திடீரென்று இருதயத் தாக்கு ஏற்பட்டு இயற்கை எய்தினார். இந்த செய்தி கிடைத்ததும் இராமாவரம் தோட்டத்துக்குச் சென்று இறுதி அஞ்சலி செய்தார் முதலமைச்சர் கலைஞர். 'எங்கே தகனம் செய்கிறீர்கள்?' என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். 'இராமாவரம் தோட்டத்திலேயே எம்.ஜி.ஆருக்கும், அவரது தாயாருக்கும் நினைவகம் இருக்கிறது. அதற்கு அருகில் தகனம் செய்யப் போகிறோம்' என்றார்கள். உடனடியாக அரசு மரியாதை வழங்கப்படும் என்று அறிவித்தார் முதலமைச்சர் கலைஞர். மே20 ஆம் தேதி அரசு விடுமுறை என்று அறிவித்தார் முதலமைச்சர் கலைஞர்.

**''மறைந்த முன்னாள் முதலமைச்சர் திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களின் உடல் நாளை ( 20.5.1996) மாலை சென்னை இராமாவரம் தோட்டத்தில் அரசு மரியாதையுடன் உடல் தகனம் செய்யப்படும்"** என்று முதலமைச்சர் அவர்கள்தான் அறிவிப்பே செய்தார்கள். இறுதி நிகழ்ச்சியில் வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார், சமூகநலத் துறை அமைச்சர் எஸ்.பி.சற்குண பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

முதலமைச்சர் கலைஞர் வெளியிட்ட இரங்கல் அறிக்கையில், **"இந்தத் தேர்தலில் தி.மு.க. பெற்ற வெற்றிக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு என்னை மனப்பூர்வமாக வாழ்த்தினார்கள். நானே நேரில் வந்து பார்ப்பதாகச் சொல்லி இருந்தேன். அதற்குள் இப்படியொரு அதிர்ச்சியான செய்தி வந்து விட்டது"** என்பதையும் வெளிப்படுத்தி இருந்தார்.

16.6.1996 அன்று இராமாவரம் தோட்டத்தில் ஜானகி அம்மையார் படத்திறப்பு விழா நடைபெற்றது. படத்தை திறந்து வைக்க அழைக்கப்பட்டவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். கடந்த கால நினைவுகளைத் தொகுத்து மிக நீண்ட உரையாற்றினார் கலைஞர் அவர்கள்.

அந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய எம்.ஜி.ஆர். அவர்களின் நிழல் ஆர்.எம்.வீரப்பன் அவர்கள், "ஜானகி அம்மையார் படத்தை முதலமைச்சர் கலைஞர் திறந்து வைப்பது காலம் அளித்த துல்லியமான தீர்ப்பு" என்று குறிப்பிட்டார்.

**"தமிழகத்தின் வரலாற்றை இந்த நூற்றாண்டில் எழுதத் தொடங்கிய தலைவர்கள், அந்த வரிசையில் அவர்களுடைய வழியிலே நடந்து செல்வதற்கு இன்றைக்கு ஒருவரை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள்தான் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் ஆவார்கள். அத்தகைய டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தப் படத்தினைத் திறந்து வைப்பதிலேதான், இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அமைந்திருக்கிறது. தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்த அன்றைய நள்ளிரவு கலைஞர் அவர்களை ஜானகி அம்மையார் அவர்கள் வாழ்த்தி இருக்கிறார்கள்.**

**புரட்சித் தலைவரின் காதலியாக இருந்து அவர் கைப்பிடிக்கும் மனைவியாக ஜானகி அம்மையார் அவர்கள் மாறுவதற்கு அன்றைக்கு உடன் இருந்தவர், புரட்சித் தலைவர் அவர்களுக்கு உடன்பிறவாச் சகோதரராக இருந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு அந்த ஜானகி அம்மையார் அவர்கள் மறைந்ததற்குப் பிறகு அவர்களது உடல் அரசு மரியாதையோடு நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிப்பதற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார்கள். காலத்தின் இந்தத் தீர்ப்பை மாற்ற எவராலும் முடியாது.**

**இது இப்படி நடைபெறவில்லை என்றால் இதற்கு சிறப்பு வந்து சேராது. இவ்வளவு அமைதியாக நாம் இங்கே இருக்க முடியாது. இவ்வளவு மனம் உருகி அவர்களை வணங்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. என்னைப் போன்றவர்கள் கூட உங்கள் முன்னால் நிற்பதற்கு அனுமதியே கிடைத்திருக்காது. தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞருக்கு தொண்டர்களின் சார்பில் நன்றி கூறிக் கொள்கிறேன்"** என்று பேசினார் ஆர்.எம்.வீரப்பன் அவர்கள். பழனிசாமி சொல்வதைப் போல சம்பவங்கள் அந்தக் காலத்தில் நடக்கவில்லை என்பதற்கு ஆர்.எம்.வீரப்பன் அவர்களது உரையே சாட்சி.

ஜானகி அம்மையார் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, 'இது அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது' என்று சொன்னவர் ஜெயலலிதா. ஜானகி அம்மையார் அரசு மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்த அன்று( 28.1.1988) தமிழ்நாடு சட்டமன்றத்தில் வரலாறு காணாத வன்முறையை நிகழ்த்தியது யார் என்பதை பழனிசாமி சொல்வாரா?

**இத்தனை ஆண்டு காலத்தில் ஜானகி அம்மையார் பெயரை பழனிசாமியின் வாய் ஒருமுறையாவது உச்சரித்தது உண்டா? நான்காண்டு காலத்தில் ஏதாவது ஒரு திட்டத்துக்கு ஜானகி பெயரை வைத்துள்ளாரா பழனிசாமி? இப்போது என்ன திடீர் பாசம்? வேஷம்?**

**சாதனைகளைச் சொல்லி வோட்டுக் கேட்க முதுகெலும்பு இல்லாக் காரணத்தால் கப்சாக்களை விட்டு காலம் தள்ளுகிறார் பழனிசாமி.**

மதுரை மெட்ரோ திட்டம்:

# 'பிளாக்மெயில்' செய்யும் பா.ஜ.க. முதலமைச்சர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஏப். 8 -**

**மதுரைக்கு மெட்ரோ திட்டம் வரவேண்டும் என்றால் பா.ஜ.க.வைச் சேர்ந்தவரை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று 'பிளாக்மெயில்' செய்யும் மகாராஷ்டிர முதலமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்து, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பா.ஜ.க. MLAவைத் தேர்ந்தெடுத்தால்தான் மதுரைக்கு மெட்ரோ தருவோம் என்று பேரம் பேசுவதும், பிளாக்மெயில் செய்வதும்தான் மகாராஷ்டிர முதலமைச்சரின் வேலையா?**

**அரசியலமைப்பின் மீது உறுதிமொழி ஏற்ற ஒரு முதலமைச்சர், எதிர்க்கட்சி ஆளும் மாநிலத்தில் வந்து இப்படி பேசுவதற்கு வெட்கப்பட வேண்டும்.**

**நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் புறக்கணிப்பை மீறி, தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வரும் சாதனைத் திட்டங்கள் எத்தனை என்று அவருக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் கேட்டுத் தெரிந்துகொண்டு பேச வேண்டும்.**

**டபுள் எஞ்சின் என்று நீங்கள் பீற்றும் டப்பா எஞ்சின் மாநிலங்களையும் தாண்டி, #DravidianModel ஆளும் தமிழ்நாடுதான் Double Digit பொருளாதார வளர்ச்சியைச் சாதித்துள்ளது என்பது நினைவில் இருக்கட்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# ஐ.டி. - சி.பி.ஐ. - அமலாக்கத்துறை ஆகிய மூன்றையும் எதிர்க்கட்சிகளை மிரட்டும் "திரிசூலமாக" பா.ஜ.க. பயன்படுத்துகிறது!

## திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சு.சுப்பிரமணியனை ஆதரித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாக்குச் சேகரிப்பில் பேச்சு!



*நெல்லை, ஏப்.8 -*

*நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளரும், திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் சு.சுப்பிரமணியனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு திராவிட கழகத் தலைவர் கி.வீரமணி பா.ஜ.க., ஐ.டி., சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை ஆகிய மூன்றையும் எதிர்க்கட்சிகளை மிரட்டும் "திரிசூலமாக" பயன்படுத்துகிறது என திருநெல்வேலி தொகுதி பேட்டையில் நடந்த தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கூறினார்.*

*திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் சு.சுப்பிரமணியனை ஆதரித்து திராவிடர் கழகம் சார்பில் பேட்டையில் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. இதில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி கலந்து கொண்டு பேசியதாவது:-*

*முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகிய நான்... என்று முதல்வர் அவர்கள் மீண்டும் பதவி ஏற்கும் நாள் மே 4க்குப் பிறகு நிச்சயம் வரும். தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெறும் கூட்டணி அல்ல, கொள்கைக் கூட்டணி. இது தேர்தல் ஆதாயத்திற்காக மட்டும் அமைக்கப்பட்டதல்ல தமிழகத்தின் நலனிற்காக அமைக்கப்பட்ட கூட்டணி.*

*மோடி தலைமையிலான ஒன்றிய அரசு 200 லட்சம் கோடி கடன் வைத்துள்ளது. ஒன்றிய அரசின் வருவாயில் 34 சதவீதம் வட்டியாகவே செலுத்தப்படுகிறது.ஆனால் இந்தியாவிலேயே தமிழகம் 11.2 சதவீதம் பொருளாதார வளர்ச்சியை பெற்று முன்னிலையில் உள்ளது. என்று ஆர்.பி.ஐ. தரவுகள் கூறுகிறது.*

*ஏர் இந்தியா முதல் விமான நிலையங்கள் வரை அனைத்தையும் அதானி மற்றும் டாட்டா போன்ற நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு தாரைவார்த்துவிட்டது. சிங்கப்பூர், குவைத் போன்ற சிறிய நாடுகளே சொந்தமாக விமானம் வைத்திருக்கும் போது,இந்தியா தனது விமானங்களை விற்பது அவமானம். பா.ஜ.க.வின் "டபுள் இன்ஜின்" ஒன்றிய மாநில ஒரே ஆட்சி என்பது தோல்வியடைந்த ஒன்று. தமிழகத்தின் "சிங்கிள் இன்ஜின்" ஸ்டாலின் ஆட்சி. அந்த கூட்டணி இன்ஜின்களை விட அதிவேகமாகச் செயல்படுகிறது.*

*ஐ.டி., சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை ஆகிய மூன்றையும் பா.ஜ.க. எதிர்க்கட்சிகளை மிரட்டும் "திரிசூலமாக" பயன்படுத்துகிறது.*

*அமைச்சர் பொன்முடி, துரைமுருகன், ஜெகத்ரட்சகன் ஆகியோர் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து, தி.மு.க.வின் நேர்மையை நிரூபித்துள்ளது.*

*எடப்பாடி பழனிசாமி பா.ஜ.க.வின் அடிமையாக செயல்படுகிறார். தற்போது எடப்பாடியார் என அழைக்கின்றனர் மே 5ஆம் தேதிக்குப் பிறகு "எடப்பாடியார்?" என்று பா.ஜ.க.வே கேட்கும் நிலை வரும். அவர் ஒரு நல்ல நடிகர், அதை நாம் ரசிக்கிறோம். தவறில்லை அரசியலுக்கு வரும்போது தகுதி மற்றும் அனுபவம் முக்கியம், "ஒருவர் இப்போதுதான் எல்.கே.ஜி. படிக்கச் சேர்ந்திருக்கிறார். ஆனால், சேர்ந்த உடனே அவர் அந்தப் பள்ளிக்கே 'பிரின்சிபால்' ஆக வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.*

*விஜய் ஆரம்பித்திருக்கும் கட்சிக்கு எந்தவிதமான கொள்கையோ, முறையான தலைமைத்துவமோ அல்லது தெளிவான பாதையோ இல்லை, குறைந்தபட்சம் ஒரு அறிக்கையை கூடத் தாங்களாகவே எழுதத் தெரியாதவர்கள் எல்லாம் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்படுகிறார்கள். விஜய் போன்ற புதிய அரசியல்வாதிகள் பா.ஜ.க.வின் "விபீஷணர்களாகவும்", "அடிமைகளாகவும்" செயல்படக்கூடும் இத்தகைய "வானவேடிக்கை" அரசியலை மக்கள் நம்பி ஏமாந்து விடக் கூடாது. எனக்கு 93 வயது ஆகிறது. நான் சுதந்திரத்திற்கு முந்தைய பச்சை பெட்டி, மஞ்சள் பெட்டி தேர்தல்களைப் பார்த்தவன். அன்று முதல் இன்று வரை திராவிட இயக்கத்தின் கொள்கை மாறவில்லை. அந்த அனுபவத்தில் சொல்கிறேன், வெற்றி நமதே.*

*வரும் 23ஆம் தேதி அன்று உதயசூரியன் சின்னத்தில் சுப்பிரமணியனுக்கு வாக்களித்து, தமிழகத்தில் மீண்டும் ஸ்டாலின் அவர்கள் நல்லாட்சி தொடர வேண்டும்.*

*இவ்வாறு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பேசினார்.*

*இந்த கூட்டத்தில் நெல்லை தொகுதி பார்வையாளர் பேச்சி பாண்டியன், மாவட்ட அவைத் தலைவர் முருகன், மானூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் மாரியப்பன், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான், திராவிட கழக துணைப் பொதுச் செயலாளர் பிரின்ஸ், என். ஆர்.எஸ்.பெரியார், திராவிட கழக பேச்சாளர்கள் செல்வம், பிராட்லா உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.*

# முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தேர்தல் அறிக்கை!

*சென்னை, ஏப். 8 -*

*முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை வழங்க அரசை வலியுறுத்துவது உள்ளிட்ட 71 வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ளது.*

*சட்டப்பேரவைத் தேர்தலுக்கான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் தி.நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று வெளியிட்டார்.*

*"மதச்சார்பின்மை மாநில உரிமைகளைப் பாதுகாப்போம்; உழைக்கும் மக்கள் குரலை உரத்து முழங்குவோம்" என்ற முழக்கத்துடன் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், மாநில சுயாட்சி, தொழிலாளர் நலன் மற்றும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.*

*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தேர்தல் அறிக்கையில் முக்கிய அம்சமாக, மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்கக் காலக்கெடு நிர்ணயித்தல், பல்கலைக்கழக வேந்தர் பதவியிலிருந்து ஆளுநரை நீக்குதல் மற்றும் அரசியல் கட்சிகள் கார்ப்பரேட் நன்கொடை பெறுவதைத் தடை செய்தல் போன்ற அதிரடி மாற்றங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. தென்மாநிலங்களின் மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கையை குறைக்கும் தொகுதி மறுவரையறைக்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அனைத்துத் துறைகளிலும் குறைந்தபட்ச மாத ஊதியமாக ரூ.26 ஆயிரம், 100 நாள் வேலைத் திட்டக் கூலியை ரூ.700 ஆக உயர்த்தி 200 நாட்களாக விரிவாக்குதல் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.5 ஆயிரம் ஓய்வூதியம் போன்றவற்றுக்கு தேர்தல் அறிக்கையில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.*

*வேளாண் விளைபொருட்களுக்கு உற்பத்தி செலவுடன் 50 சதவீதம் கூடுதல் விலை வழங்க ஒன்றிய அரசை வலியுறுத்தவும், கோயில் மற்றும் வக்பு நிலங்களில் வசிப்போருக்குப் பட்டா வழங்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*தாது மணல், கல் மற்றும் கிரானைட் குவாரிகளை அரசாங்கமே ஏற்று நடத்துதல், கேரளாவைப் போல 'சேவை பெறும் உரிமைச் சட்டம்' கொண்டு வருதல், அனைத்துத் துறைகளிலும் தமிழை முழுமையான ஆட்சி மொழியாக்குதல் மற்றும் இந்தி திணிப்பை எதிர்த்தல் போன்றவை மார்க்சிஸ்ட் தேர்தல் அறிக்கையில் முக்கிய இடம் பிடித்துள்ளன. மேலும், சத்துணவு திட்டத்தில் அசைவ உணவுகள், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு அரசு வேலையில் முன்னுரிமை மற்றும் புதிய ஆட்டோ வாங்க ரூ.1 லட்சம் மானியம் உள்ளிட்ட 71 வாக்குறுதிகள் இதில் இடம் பெற்றுள்ளன.*



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், மேற்கு சட்டமன்றத் தொகுதி வேட்பாளருமான கே.என்.நேரு 57 வது வார்டுக்கு உட்பட்ட எடமலைப்பட்டி புதூர் காளியம்மன் கோயில் தெரு அரசு காலனி எம்.ஜி.ஆர். நகர், முருகன் நகர், காதிகிராப் காலனி மெயின் ரோடு, முத்து மாரியம்மன் கோவில் தெரு, அந்தோணியார் கோவில் தெரு, வடக்கு தெற்கு மேற்கு தெரு, நல்ல தண்ணி தெரு, செல்ல விநாயகர் கோவில் தெரு உள்ளிட்ட வார்டுக்கு உட்பட்ட அனைத்து இடங்களுக்கும் நேரில் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அவருடன் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் டோல்கேட் சுப்பிரமணி, காஜாமலை விஜய், கண்ணன், புஷ்பராஜ், ராமதாஸ், குணசேகர், வழக்கறிஞர்கள் கவியரசன், ஷீலா மணிவண்ண பாரதி, மாவட்ட மாநில துணை அமைப்பாளர் கவிதா உட்பட தோழமைக் கட்சி நிர்வாகிகள் பலர் உடன் சென்றனர்.